ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2119/3 - 2019 අප්‍රේල් මස 17 වැනි බදාදා - 2019.04.17
2119/3 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 11/80 (29)

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்

உணவு மதியுரைக் குழுவின் ஆலோசனையுடன் 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வைத்தியர் ராஜித சேனாரத்ன,
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்.

கொழும்பு,
2019, ஏப்பிறல் 16.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் உணவு (சீனி, உப்பு மற்றும் கொழுப்புக்கான நிறக்குறியீடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. (1) உணவானது இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் சுட்டுத்துண்டு இடப்பட்டிருந்தாலேயொழிய, ஆளெவரும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள ஏதேனும் திண்ம, அரைத் திண்ம உணவை பொதி செய்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்கென கொடைமுனைவு செய்தலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது -

(அ) இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இல் குறித்துரைக்கப்பட்ட சீனியின் அளவு ; அல்லது

(ஆ) இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் ஆ இல் குறித்துரைக்கப்பட்ட உப்பின் அளவு ; அல்லது

(இ) இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் இ இல் குறித்துரைக்கப்பட்ட கொழுப்பின் அளவு.

(2) ஏதேனும் திண்ம அல்லது அரைத் திண்ம உணவு ஆனது, அதன் உணவுக் கொள்கலன்களின் சுட்டுத்துண்டில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைய நுகர்விற்கு முன்னர் தயாரிக்கப்பட அல்லது மீளமைக்க வேண்டியுள்ளவிடத்தும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட அல்லது மீளமைத்த திண்ம அல்லது அரைத் திண்ம நிலையில் இருக்குமிடத்து, இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சீனி, உப்பு அல்லது கொழுப்பு அளவைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய உணவின் கொள்கலன்கள் :-

(அ) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட திண்ம அல்லது அரைத் திண்ம உணவு எனும் விடயத்தில், ஏற்புடையவாறான இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் சுட்டுத்துண்டு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட திண்ம அல்லது அரைத் திண்ம உணவு எனும் விடயத்தில், இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க ஆக்கப்பட்ட சுட்டுத்துண்டு அத்தகைய உணவின் கொள்கலனில் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

3. ஏதேனும் திண்ம அல்லது அரைத் திண்ம உணவு ஆனது இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட சீனியின் அளவை கொண்டுள்ளவிடத்து, அத்தகைய உணவைக் கொண்டுள்ள கொள்கலன் அல்லது பொதியில் இருக்கின்ற சின்னங்கள் பின்வருவனவற்றிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும். :-

(அ) சின்னத்தின் உயரம் மற்றும் அகலம் என்பன இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு முறையே 2 சென்றி மீற்றருக்கும் மற்றும் 1 சென்றி மீற்றருக்கும் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ஆ) "சீனி" எனும் சொல் இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு வெள்ளை நிறத் தடித்த எழுத்தில் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சின்னத்துள் வெளிக்காட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது ஆகக்குறைந்தது 2 மி. மீ. எழுத்துரு அளவில் இருத்தலும் வேண்டும் ;

(இ) அத்தகைய உணவில் உள்ள சீனியின் செறிவு பற்றிய எண்சார் விபரணம் இருத்தல் வேண்டுமென்பதுடன் இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு வெள்ளைநிறப் பெட்டியினுள் இருத்தல் வேண்டுமென்பதுடன் கறுப்பு நிற தடித்த எழுத்தில் ஆகக்குறைந்தது 1.5 மி. மீ. எழுத்துரு அளவில் இருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஈ) சின்னத்தின் வர்ணக் குறியீடு ஆனது இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

4. ஏதேனும் திண்ம அல்லது அரைத்த உணவு ஆனது இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் ஆ இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட உப்பின் அளவை கொண்டுள்ளவிடத்து, அத்தகைய உணவைக் கொண்டுள்ள கொள்கலன் அல்லது பொதியில் இருக்கின்ற சின்னங்கள் பின்வருவனவற்றிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :-

(அ) சின்னத்தின் உயரம் மற்றும் அகலம் என்பன இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் அ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு முறையே 2 சென்றி மீற்றருக்கும் மற்றும் 1 சென்றி மீற்றருக்கும் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ஆ) "உப்பு" எனும் சொல் இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் ஆ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு வெள்ளை நிறத் தடித்த எழுத்தில் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சின்னத்துள் வெளிக்காட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது ஆகக்குறைந்தது 2 மி. மீ. எழுத்துரு அளவில் இருத்தல் வேண்டும் ;

(இ) அத்தகைய உணவில் உள்ள உப்பின் செறிவு பற்றிய எண்சார் விபரணம் இருத்தல் வேண்டுமென்பதுடன் இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் ஆ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு வெள்ளைநிறப் பெட்டியினுள் இருத்தல் வேண்டுமென்பதுடன் கறுப்பு நிற தடித்த எழுத்தில் ஆகக்குறைந்தது 1.5 மி. மீ. எழுத்துரு அளவில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) சின்னத்தின் வர்ணக் குறியீடு ஆனது இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் ஆ இன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் திண்ம அல்லது அரைத் திண்ம உணவு ஆனது இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் இ இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட கொழுப்பின் அளவைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய உணவைக் கொண்டுள்ள கொள்கலன் அல்லது பொதியில் இருக்கின்ற சின்னங்கள் பின்வருவனவற்றிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :-

(அ) சின்னத்தின் உயரம் மற்றும் அகலம் என்பன இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் இ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு முறையே 2 சென்றி மீற்றருக்கும் மற்றும் 1 சென்றி மீற்றருக்கும் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ஆ) "கொழுப்பு" எனும் சொல் இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் இ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு வெள்ளை நிறத் தடித்த எழுத்தில் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சின்னத்துள் வெளிக்காட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது ஆகக்குறைந்தது 2 மி. மீ. எழுத்துரு அளவில் இருத்தல் வேண்டும் ;

(இ) அத்தகைய உணவில் உள்ள கொழுப்பின் செறிவு பற்றிய எண்சார் விபரணம் இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் இ இன் நிரல் III இல் விளங்கப்படுத்தப்பட்டவாறு வெள்ளை நிறப் பெட்டியினுள் இருத்தல் வேண்டுமென்பதுடன் கறுப்பு நிறத் தடித்த எழுத்தில் ஆகக்குறைந்தது 1.5 மி. மீ. எழுத்துரு அளவில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) சின்னத்தின் வர்ணக் குறியீடு ஆனது இதற்கான I ஆம் அட்டவணையின் பாகம் இ இன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

6. சின்னங்களானவை அத்தகைய உணவைக் கொண்டுள்ள கொள்கலன் அல்லது பொதியின் சுட்டுத்துண்டின் பிரதான முகப்பில் வெளிக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் இதற்கான II ஆம் அட்டவணையில் காட்டப்பட்டவாறு ஒவ்வொன்றிற்கும் மிக அருகாமையில் வெளிக்காட்டப்படலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், இயைபான சின்னங்கள் அத்தகைய உணவுக் கொள்கலனின் அல்லது பொதியின் பிரதான முகப்பின் மேற்பரப்பின் 25% இற்கு மேற்பட்டதாக மேவுகை செய்யுமிடத்து, அத்தகைய சின்னங்கள் வழங்கு பொதியில் வெளிக்காட்டப்படுதலும் வேண்டும்.

7. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையதாதல் ஆகாது :-

(அ) ஏதேனும் தொடக்க நிலை விவசாய உற்பத்திப் பொருட்கள் ;

(ஆ) தனிவேறான பொதியில் விற்கப்படும் வாசனைத் திரவியங்கள், சரக்குகள், கறிக் கலவைகள் மற்றும் சுவையூட்டிக் கலவைகள் ;

(இ) விசேட போசனைக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உணவு அல்லது மருத்துவ வழிகாட்டல் அல்லது மருத்துவ தொழிலரின் பரிந்துரையின் கீழ் பயன்படுத்தப்பட வேண்டியது என பிரதானமாக வெளிக்காட்டப்படுகின்ற சுட்டுத்துண்டுகளைக் கொண்டுள்ள உணவுகள் ;

(ஈ) ஏதேனும் பொதியிடப்பட்ட உணவின் தன்மை, தரம், தொகை, உற்பத்தி அல்லது வணிகப் பெயர் ஆகியன கொள்வனவு செய்பவரினால் கோரப்பட்டிருந்தும் அத்துடன் கொள்வனவு செய்பவரின் சமூகத்தில் நிறுக்கப்பட்டும், எண்ணப்பட்டும் அல்லது அளக்கப்பட்டும் இருக்குமிடத்துமான உணவின் ஏதேனும் பொதி ;

(உ) மொத்த விற்பனைப் பொதிகள், அதனுள் உள்ளடக்கிய சில்லறை பொதிகள் இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுமிடத்து ;

(ஊ) குழந்தைகளுக்கான பால் சூத்திரம் ;

(எ) ஏற்றுமதி நோக்கங்களுக்காக மட்டும் பொதி செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் ;

(ஏ) ஏதேனும் திண்ம உணவு அத்தகைய உணவுக் கொள்கலனின் சுட்டுத்துண்டில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அல்லது மீளமைக்கப்பட்டதன் மேல் அத்தகைய உணவு நுகர்வு மட்டத்தில் ஒரு திரவமாக மாறுமிடத்து ; அல்லது

(ஐ) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் உற்பத்தி செய்யப்படுகின்றதுமான ஏதேனும் திண்ம அல்லது அரைத் திண்ம உணவு.

8. இவ்வொழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"அம்பர்" என்பது, R255, G195 மற்றும் B9 அகவுகள் சிவப்பு, பச்சை, நீல (RGB) வர்ண முறை அல்லது சமமானது எனப் பொருள்படும் ;

"கொழுப்பு" என்பது, ரைகளிசறைட் வடிவத்தில் கொழுப்பமிலத்தில் அடங்கியுள்ள மொத்த கொழுப்பு எனப் பொருள்படும் ;

"பச்சை" என்பது, G195 அகவுகள் சிவப்பு, பச்சை, நீல (RGB) வர்ண முறை அல்லது சமமானது எனப் பொருள் படும் ;

"பிரதான முகப்பு" என்பது, பொதியின் முன் பக்கம் எனவும், சில்லறை விற்பனைக்காக வழக்கமான நிலைமைகளின் கீழ் வெளிக்காட்டி வைக்கப்படுவதற்கு, முன்வைக்கப்படுவதற்கு, காட்சிக்கு வைக்கப்படுவதற்கு அல்லது சோதனை செய்யப்படுவதற்குக் கூடுதலான சாத்தியங்கொண்டதான ஒரு சுட்டுத்துண்டின் பாகம் என்று பொருள்படும்.

"தொடக்க நிலை விவசாய உற்பத்திப் பொருட்கள்" என்பது, தானிய வகைகள், பருப்பு வகைகள், மரக்கறிகள், வேர்கள் மற்றும் கிழங்கு வகைகள், பழங்கள், உப்பு, சீனி, இறைச்சி மற்றும் மீன் போன்றன உள்ளடங்கும் ;

"சிவப்பு" என்பது- சிவப்பின் R230 அகவுகள், சிவப்பு, பச்சை, நீல (RGB) வர்ண முறை அல்லது சமனானது எனப் பொருள்படும் ;

"உப்பு" என்பது, சோடியம் குளோரைட்டு (NaCl) வடிவத்தில் உணவில் அடங்கியுள்ள மொத்த உப்பு எனப் பொருள்படும் ; அத்துடன்

"சீனி" என்பது, மொனோசக்கரைட்ஸ் அத்துடன் டைசக்கரைட்ஸ் வடிவத்தில் உணவில் அடங்கியுள்ள மொத்த சீனி எனப் பொருள்படும் ;

## அட்டவணை I

(ஒழுங்குவிதிகள் 2, 3, 4 மற்றும் 5)

பகுதி - அ

திண்ம அல்லது அரைத் திண்ம உணவில் உள்ள மொத்த சீனி

| நிரல் I<br>சீனியின் அளவு<br>(100 கிராமிற்கு) | நிரல் II<br>சின்னத்தின் வர்ண குறியீடு | நிரல் III<br>சின்னம் |
|---|---|---|
| 22 கிராமிற்கு கூடியது | சிவப்பு |  |
| 5 கிராமிற்கும் 22 கிராமிற்கும் இடைப்பட்டது | அம்பர் |  |
| 5 கிராமிற்கு குறைவானது | பச்சை |  |

பகுதி - ஆ

திண்ம அல்லது அரைத் திண்ம உணவில் உள்ள மொத்த உப்பு

| *நிரல் I*<br>*உப்பின் அளவு*<br>*(100 கிராமிற்கு)* | *நிரல் II*<br>*சின்னத்தின் வர்ண குறியீடு* | *நிரல் III*<br>*சின்னம்* |
|---|---|---|
| 1.25 கிராமிற்கு கூடியது | சிவப்பு |  |
| 0.25 கிராமிற்கும் 1.25 கிராமிற்கும் இடைப்பட்டது | அம்பர் |  |
| 0.25 கிராமிற்கு குறைவானது | பச்சை |  |


பகுதி - இ

திண்ம அல்லது அரைத் திண்ம உணவில் உள்ள மொத்த கொழுப்பு

| நிரல் I<br>கொழுப்பின் அளவு<br>(100 கிராமிற்கு) | நிரல் II<br>சின்னத்தின் வர்ண குறியீடு | நிரல் III<br>சின்னம் |
|---|---|---|
| 17.5 கிராமிற்கு கூடியது | சிவப்பு |   |
| 3 கிராமிற்கும் 17.5 கிராமிற்கும் இடைப்பட்டது | அம்பர் |   |
| 3 கிராமிற்கு குறைவானது | பச்சை |   |

அட்டவணை II

(ஒழுங்குவிதி 6)




05-02